
Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 10 2025

திங்கட்கிழமை, 10 பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 155 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE




முழு நாட்டையும் 4 மணி நேரம்

# இருளாக்கிய "சேட்டை குரங்கு"

- 'கிளி'யில் மின்பிறப்பாக்கி இயங்கவில்லை
- மின்னுயர்த்திக்குள் சிக்கியவர் பத்திரமாக மீட்பு
- சாப்பாட்டுக்கு அலைமோதிய சனம்
- தண்ணீர் விநியோகமும் தடைப்பட்டது
- அலற மறுத்த அலைபேசிகள்
- ரயில் சமிக்ஞைகள் அணைந்தன

வார இறுதி விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை (09) நாடளாவிய ரீதியில் திடீரென இரண்டு தடவைகள் மின் தடை ஏற்பட்டமையால், மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பகல் 11 மணியளவில் தடைப்பட்ட மின்சாரம் 3 மணிநேரத்துக்குப் பின்னர் பிற்பகல் 2 மணியளவில் வழமைக்குத் திரும்பியது. எனினும் 2.10 மணியளவில் மின்சாரம் மீண்டும் தடைப்பட்டுள்ளது. அவ்வாறு தடைப்பட்ட மின்சாரம் 3.02 மணிக்கு மீண்டும் வழமைக்குத் திரும்பியது.

ஞாயிற்றுக்கிழமை என்பதனால் அரச அலுவலகங்கள் பல மூடப்பட்டிருந்தன. எனினும், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் பல தனியார் நிறுவனங்கள் திறந்திருந்தன. வைத்தியசாலைகளும் திறந்திருந்தன.

அங்கு மினுயர்த்தி செயற்படாமையால், நோயாளர்கள் மட்டுமன்றி, வைத்தியர்கள் உட்பட பணியாட்கள் பெரும் சிரமப்பட்டுள்ளதுடன், பிரதான வைத்தியசாலைகளில் மின் பிறப்பாக்கி இயக்கப்பட்டு ஏனைய சேவைகள் வழமைக்குள் கொண்டுவரப்பட்டன.

கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் அடுக்குமாடி குடியிருப்புகளில் வாழ்பவர்கள். மின்தடையால் வெந்து தணிந்துள்ளனர். அது மட்டுமன்றி நீர் விநியோகமும் பாதிக்கப்பட்டது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மின் தடை ஏற்பட்டது.

மின்பிறப்பாக்கியும் இயங்காத நிலையில் பல்வேறு சிகிச்சை பிரிவுகள் அங்குப் பாதிக்கப்பட்டுள்ளன.

நோயாளர் விடுதி உள்ளிட்ட சிகிச்சைக்காக தங்க வைக்கப்பட்டுள்ள நோயாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாகக் கொண்டு வரப்பட்ட மின்பிறப்பாக்கியும் பொருத்தப்படாத நிலையில், வைத்தியசாலையின் பல்வேறு சேவைகள் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பகல் 11 மணியளவில் தடைப்பட்ட மின்சாரம் 3 மணி நேரத்துக்குப் பின்னர் பிற்பகல் 2 மணியளவில் வழமைக்குத் திரும்பியது. எனினும், 2.10 மணியளவில் மீண்டும் மின்சாரம் தடைப்பட்டது.

இந்த குறுகிய நேரத்துக்குள் மின் விசிறி, மின்னுயர்த்தி உள்ளிட்டவை செயற்பட்டன.

இந்நிலையில், ராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலையில் மூன்று மாடிகளைக்கொண்ட கட்டிடத்தின் மின்னுயர்த்திக்குள் பணியாளர் ஒருவர் சிக்கிக்கொண்டார். விடயம் அறிந்து விரைந்து செயற்பட்ட பணியாளர் குழு கடுமையான முயற்சியின் பின்னர் அவரை பத்திரமாக மீட்டெடுத்தது.

திடீர் மின்தடையால் வீடுகளில் சமைக்க முடியாதவர்கள் உணவகங்களை நோக்கிப் படையெடுத்தனர். இதனால் சில உணவகங்களை எட்டிக்கூட பார்க்க முடியவில்லை. அந்தளவுக்கு சனம் திரண்டிருந்தது.

தங்களுடைய அலைபேசிகளை முன்கூட்டியே சார்ஜ் செய்துகொள்ள முடியாதவர்கள். அந்த 4 மணிநேரமும். போனில் சார்ஜ் இருந்திருந்தால் என புலம்பிக்கொண்டிருந்தனர். பலரின் அலைபேசிகள் அலறாமல் அமைதியாகவே கிடந்தன.

மின்சாரம் மீண்டும் திரும்பிய கையுடன், அவ்வாறானவர்களின் முதல் பணி அலைபேசிகளை சார்ஜ் செய்வதாகவே இருந்தனர்.

ஒரு சில பிரதான ரயில் தண்டவாளங்களில் ரயில்வே சமிக்ஞைகள் அணைந்தமையால் ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டன. பாதுகாப்பான ரயில் தண்டவாளங்களைக் கடந்து சென்றவர்களும் ஏனைய வாகனங்களில் சாரதிகளும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்ட கடந்தனர்.

பாணந்துறை கிரிட் துணை மின் நிலையத்துடன் கூடிய மின் இணைப்பில் குரங்கு ஒன்று சிக்கியதாலே நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தால் நாடு முழுவதும் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மின் விநியோகத்தில் பாரிய இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனினும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு பின்னர் அமைச்சரின் கூற்றை உறுதிப்படுத்தாமல் "பாணந்துறை துணை மின்நிலையத்தில் அவசரநிலை" என்று விவரித்தது.



## நீர் கட்டணத்தில் திருத்தம்

மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்கு ஏற்ப, இந்த மாத இறுதியில் நீர் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நீர் கட்டணத்தைக் குறைப்பதற்காகத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு தனக்கு கிடைத்ததாகவும் அதன் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு கட்டண திருத்தம் குறித்த முடிவை அறிவிக்க முடியும்வும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த முறை நீர் கட்டணத்தை 10 முதல் 30 சதவீதத்திற்கு இடையில் குறைக்க முடியும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி அனுர ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விஜயம்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு திங்கட்கிழமை(10) ஐக்கிய அரபு எமிரேட்ஸ் புறப்படவுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஜனாதிபதி ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இந்த விஜயத்தை மேற்கொள்கிறார்.

இந்த விஜயத்தின் போது,

தொடர்ச்சி P2




2025 வரவு-செலவுத் திட்டம் தொடர்பில்

## இலங்கைக்கு IMF விதித்துள்ள நிபந்தனை

இந்த ஆண்டுக்கான (2025) வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

நாட்டில் இம் மாதத்திற்கான (பெப்ரவரி) எரிவாயு விலை திருத்தத்திற்கு நிதி அமைச்சின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விலை திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் இந்த மாதத்தின் முதல் வாரத்தில் நிதி அமைச்சகத்தின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டதாக அதன் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

உலக சந்தையில் எரிவாயு விலைகளுக்கு ஏற்ப நாட்டின் எரிவாயு விலை மாதந்தோறும் திருத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 4ஆம் திகதி அறிவிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், இந்த வருடம் பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தம் இன்னும் அறிவிக்கப்படாமை குறித்து லிட்ரோ நிறுவனம் ஊடகத்திற்கு கருத்து தெரிவித்துள்ளது.

மேலும், எரிவாயு விலை திருத்தம் தொடர்பான அனைத்து பரிந்துரைகளும் ஏற்கெனவே நிதி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சகத்தின் ஒப்புதல் இல்லாமல் அதை அறிவிக்க முடியாது என அதன் பேச்சாளர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



## 6 நெல் களஞ்சியசாலைகள் திறப்பு

சதொசவுக்கு உரித்தான 6 நெல் களஞ்சியசாலைகள் ஞாயிற்றுக்கிழமை (9) முதல் திறக்கப்படும் என வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, கடந்த காலங்களை விடவும் அதிகளவான உத்தரவாத விலையை தற்போதைய அரசாங்கம் வழங்கியுள்ளது.

தற்போதைய உத்தரவாத விலையைக் கடந்த ஆண்டை விடவும் 15 ரூபாய் அதிகமாக நிர்ணயித்துள்ளது.

தொடர்ச்சி P2

## வெளிநாட்டுப் பண வரவு அதிகரிப்பு




இவ்வருடம் (2025) ஜனவரியில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்பிய பணத்தின் அளவு 573 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது கடந்த 2024 ஜனவரி மாத்தில் பதிவு செய்யப்பட்ட 487.6 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது 17.5% சதவீத அதிகரிப்பு எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில், 2024ஆம் ஆண்டில் மொத்தமாக வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து 6.57 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு கிடைத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2



கொழும்பு துறைமுகப் பகுதியிலுள்ள

## மனிதப் புதைகுழிகளில் இருந்து 16 பேரின் எலும்புக்கூடுகள் மீட்பு

கொழும்பு துறைமுகப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் தற்போது வரை முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் சுமார் 16 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அதில் இரண்டு குழந்தைகளின் எலும்புக்கூடுகள் இருந்துள்ளதாகவும் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா தெரிவித்துள்ளார்.

இந்தப் புதைகுழி வழக்கமான புதைகுழி அல்ல என்றும் உடல்கள் புதைக்கப்பட்ட விதம் அவை கொலை செய்யப்பட்டிருப்பதைக் குறிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## 'எல்ல ஒடிஸி' மங்கள பயணம் 10 ஆரம்பம்

'எல்ல ஒடிஸி' (நானுஓயா) 10ஆம் திகதி தனது மங்களகரமான பயணத்திற்கு தயாராகி வருகிறது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

'எல்ல ஒடிஸி' (நானுஓயா) என்ற புதிய ரயில் சேவை நானுஓயா மற்றும் பதுளை ரயில் நிலையத்திற்கு இடையே (10.02.2025) முதல் இயக்கப்படவுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் அதிக தேவையைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றமில்லை

அடுத்த வாரத்திற்குள் தொடர்புடைய பரிந்துரைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், கடந்த சில மாதங்களாக எரிவாயு விலையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரித்த போதிலும், மக்களின் சிரமங்களைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குப் பாதிக்காத வகையில் எரிவாயு விலையை மாற்றாமல் பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலையில் எந்த மாற்றமும் இருக்காது என்று லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

# 6 நெல் களஞ்சியசாலைகள் திறப்பு

தற்போதைய உத்தரவாத விலை நியாயமானது என பெரும்பாலான விவசாயிகள் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், அரசியல் நோக்கங்களுக்காகச் சிலர் குறித்த விலை போதாது.

எதிர்வரும் 15 முதல் 20 ஆம் திகதியாகும் போது நெல்லுக்கான விலை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை அறிய முடியும். விவசாயிகளிடமிருந்து 10 முதல் 15 சதவீதமான நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.

எனவே, 230 ரூபாவுக்கு குறைவான விலையில் நாடு அரிசியை வழங்கும் எதிர்பார்ப்பிலேயே நெல்லுக்கான விலை நிர்ணயிக்கப்பட்டது.

நெல் கிடைக்கும் அளவுக்கு ஏற்ப இன்று முதல் களஞ்சியசாலைகள் திறக்கப்படும்.

இந்த மாத இறுதியில் நாடளாவிய ரீதியிலுள்ள 220 நெல் களஞ்சியசாலைகள் ஊடாக அரசாங்கம் நெல் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (S.R)

# வெளிநாட்டுப் பண வரவு அதிகரிப்பு

இது 2023ஆம் ஆண்டில் பெறப்பட்ட 5.96 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும் போது 10.1% சதவீத அதிகமாகும்.

இந்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் பணமானது, நாட்டின் ஏற்றுமதி வருவாயைத் தவிர, இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் இரண்டாவது பெரிய மூலம் எனவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி அனுர ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விஜயம்

ஜனாதிபதி அனுர திசாநாயக்க டுபாயில் நடைபெறும் 2025ஆம் ஆண்டுக்கான உலக அரசாங்க உச்சி மாநாட்டில் உரையாற்ற உள்ளார்.

உலக உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்களுடன் ஜனாதிபதி அனுர திசாநாயக்க இருதரப்பு கலந்துரையாடல்களையும் நடத்த உள்ளார்.

இலங்கை ஜனாதிபதிக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஜனாதிபதி முகமது பின் சயீத் அல் நஹ்யானுக்கும் இடையில் ஒரு சுற்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளும் நடைபெற உள்ளன.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான பல துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அனுர திசாநாயக்க, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துணைத் தலைவரும் பிரதமருமான ஷேக் முகமது பின் ரஷீத் அல் மதூமையும் சந்திக்கவுள்ளார்.

# இலங்கைக்கு IMF விதித்துள்ள நிபந்தனை

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளதுடன், மார்ச் மாதம் 21ஆம் திகதி வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதுஈ சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசாக் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை இன்னும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தில் உள்ளது.

மேலும் இந்த மாத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்வைக்க உள்ளது. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நாணய நிதியத்தின் எதிர்பார்ப்புகள் அல்லது நிபந்தனைகள் எத்தகையதாக உள்ளது என்று கேள்வி எழுப்பியுள்ளீர்கள்.

2024ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி இலங்கையில், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வு குறித்து பணியாளர் மட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இதன் பிரகாரம் நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கும்.

எவ்வாறாயினும், இந்த நிதியுதவிக்கான மேலதிக உறுதிப்பாடல்களுக்கான கலந்துரையாடல்கள் எதிர்வரும் வாரங்களில் நடைபெற உள்ளது.

இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல் பாராட்டத்தக்க விளைவுகளைத் ஏற்படுத்தியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் நான்காவது - மூன்றாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.5 சதவீதம் வளர்ச்சியடைந்தது. 2024ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் சராசரி பணவீக்கம் இலக்கை விட மிகவும் குறைவாகவே உள்ளது.

மேலும் 2024ஆம் ஆண்டின் இறுதியில் சர்வதேச இருப்புக்கள் 6.1 பில்லியனாக அதிகரித்துள்ளது.

எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை கருத்தில் கொள்ளும் போது, கடந்த நவம்பரில் எட்டப்பட்ட பணியாளர் நிலை ஒப்பந்துடன் தொடர்புப்படுகிறது.

இதனை அடுத்த வாரங்களில் இடம்பெற கூடிய கலந்துரையாடல்களின் போது நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்படுத்தப்படும். எனவே, விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில், 2025 வரவு -செலவு திட்டத்தை சமர்ப்பது முக்கியமாகும் என கூறியுள்ளார்.

# ‘எல்ல ஒடிஸி’ மங்கள பயணம் 10 ஆரம்பம்

ரத்நாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் இந்த ரயில் சேவை தொடங்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் செவ்வாய் கிழமைகளைத் தவிர வாரத்தின் ஒவ்வொரு நாளும் S14 பெட்டிகளுடன் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

காலை 10:00 மணி நானுஓயாவிலிருந்து பதுளைக்கு புறப்படும் இந்த ரயில், பதுளையிலிருந்து பகல் 1 மணிக்கு நானுஓயாவிற்கு புறப்படும்.

முதல் வகுப்பு முன்பதிவு இடங்கள் (AFC) - ரூ.7,000/-

இரண்டாம் வகுப்பு முன்பதிவு இருக்கைகள் (SCR) - ரூ.6,000/-

மூன்றாம் வகுப்பு முன்பதிவு இருக்கைகள் (TCR) - ரூ.5,000/-

பின்வரும் பார்வைப் புள்ளிகளில் ரயில் மெதுவாக நகர்கிறது.

1. எல்ஜின் நீர்வீழ்ச்சி

2. உச்சிமாநாடு நிலை ரயில் நிறுத்தங்கள்

1) இதல்கஸ்ஸின்னா ரயில் நிலையம் 06 நிமிடங்கள்

2) ஒன்பது வளைவுகள் பாலம் 10 நிமிடங்கள் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மனிதப் புதைகுழிகளில் இருந்து 16 பேரின் எலும்புக்கூடுகள் மீட்பு

இது தொடர்பில் மேலும் அவர் கூறியுள்ளதாவது,

இந்த நிகழ்வுகளுக்கான காலப்பகுதியை விஞ்ஞான ஆய்வுக்குப் பிறகு தீர்மானிக்க முடியும்.

நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களின்படி, அறிக்கைகள் வழங்கப்படும்.

இதுவரை 13 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதிக எண்ணிக்கையிலான உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூன்று பேரின் எலும்புக்கூடுகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

சிறு குழந்தையின் கையில் செம்பு கலந்த ஏதோ ஒன்றால் கறை ஏற்பட்டதையும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க மற்றும் துறைமுக காவல்துறையின் பொறுப்பதிகாரி எச்.எம்.எஸ்.ஜயரத்ன அவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

கொழும்பு துறைமுக பகுதியில் உள்ள மனித புதைகுழி அகழ்வாராய்ச்சிக்குப் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமை தாங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கதிரை சின்னத்தில் களமிறங்கும் ஸ்ரீ.ல.சு.



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் ‘கதிரை’ சின்னத்தில் களமிறங்கவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னர் கூறியவற்றை இப்போது செயற்படுத்த முடியாது என்பதை நிலைநிறுத்தியுள்ளது என தான் எண்ணுவதாக துமிந்த திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். .

இது தொடர்பில் மேலும் அவர் கூறியுள்ளதாவது,

“கதிரை சின்னம் என்பது 17 வருடங்கள் எதிர்க்கட்சியிலிருந்து சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டுக்குப் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்திய சின்னமாகும். அந்த சின்னத்தையே இம்முறை நாங்கள் பயன்படுத்துகின்றோம்.

இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச சபைகளிலும் இந்த சின்னத்திலேயே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

அதனாலேயே இன்று நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் வருகை தந்தோம். தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றிணைந்து மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட கூட்டணியிலேயே நாங்கள் போட்டியிடுகின்றோம்.

அனைவரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக உற்சாகத்தோடு காத்திருக்கிறார்கள். கடந்த தேர்தலில் நாட்டின் அனைத்து இன மக்களும் மிகப்பெரிய ஏமாற்றத்துக்கு ஆளாகியுள்ளார்கள்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# “மக்களை வாழ வைக்க முடியாத அரசாங்கம்”

நாட்டில் மக்களை வாழ வைக்க முடியாத அரசாங்கமே தற்போது காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை தேர்தல் தொகுதி அமைப்பாளர் சுதத் விக்ரமரத்வின் தலைமையில் அவிசாவளையில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்ட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, மலிவு விலையில் தேங்காய் அரிசி மற்றும் உப்பு வாங்க முடியாத நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க முடியாத அரசு எவ்வாறு மக்களை வாழ வைக்கப்போகிறது என்ற விடயத்தில் பிரச்சினை காணப்படுகிறது.

தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது நெல்லுக்கு 150 ரூபா உத்தரவாத விலையைத் தருவதாக கூறினர், ஆனால், இன்று அவர்கள் வயல்வெளிகளுக்குச் சென்று விவசாயியைச் சந்திப்பதற்கே பயப்படுகின்றனர்.

இவ்வாறான பொய்களைச் சொல்லி மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயிகளைக் கைவிட்டுள்ளனர்.

இன்று அரச உத்தியோகத்தர்கள் விருப்பத்தின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவானவர்கள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.



இந்நாட்டு மக்களை நிர்க்கதியாக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக முன்னிற்பது மட்டுமன்றி பாரபட்சம் மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாவோருக்கு நீதியை நிலைநாட்டும் வேலைத்திட்டமொன்றை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும்.

பெரும்பான்மையான மக்கள் இன்று கடன் சுமைக்கு ஆளாகியுள்ளனர். நலமாக வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளன.

உற்பத்தி, நுகர்வு, முதலீடு என்பன குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன. தங்கத்தை அடகு வைத்து விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும் உரங்களுக்கு நிலையான விலை வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் கடன் சுழற்சியில் மீண்டும் சிக்கியுள்ளனர்.

கூட்டுறவு சங்கங்களில் இருந்து கடன் வாங்குவது அதிகரித்து காணப்படுகின்றன. இவர்களின் வருமான மூலங்கள் சுருங்கிபோயுள்ளன.

அண்மையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்ற போதும் அவர்களுக்கு உரிய தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

சேவை செய்ய வேண்டும் என்றே மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை இந்த ஆட்சியாளர்களுக்கு பெற்றுத் தந்தனர்.

பழைய பாணியிலேயே இவர்களும் ஆட்சி நடத்தி வருகின்றனர்.

மக்கள் ஆணைக்கு இந்த அரசாங்கம் நியாயத்தை நிலைநாட்ட வேண்டும்.

காலம் தாழ்த்தல், இழுத்தடிப்பு தீர்வாகாது. மக்கள் உங்களிடமிருந்தும் இவற்றை எதிர்பார்க்கவில்லை. பிரச்சினைகள் எழும் போது சமாளிப்புக்கு பல விடங்களை முன்வைத்து வருகிறீர்கள். ஆனால், எடுத்த நடவடிக்கைகள் ஒன்றுமில்லை. அதிகாரம் உங்கள் கைவசமே காணப்படுகின்றது.

தனது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் துன்பப்படும் மக்களுக்காகத் எப்போதும் திறந்தே இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் மக்கள் மன்ற அலுவலகமாக மாற்றப்பட்டு தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.



## சாயி பாபா ஆலய நூதன பிரதிஷ்டை

எல்லாம் வல்ல இறைப் பெரும் கருணையினால், நிகழும் 2025 ஆம் ஆண்டு, எதிர்வரும் மார்ச் மாதம் 9ம் திகதி ஞாயிறன்று அவிசாவளை - புவக்பிட்டிய, எல்ஸ்டன்எஸ்டேட் பகுதியில் அமைந்துள்ள சத்குரு சீரடி சாயி பாபா ஆசிரமம், தியான மற்றும் சமூக சேவை மையம் பிராண பிரதிஷ்டை செய்யப்பட்டு கோலாகலமாக மக்களுக்கு அர்ப்பணிக்கப்படவுள்ளது.

ரம்மியமான மலைச்சாரல், நீண்டு உயர்ந்த ரப்பர் மரங்கள், பசுமையும் அமைதியும் அடர்ந்த அந்த மலையடி வாரத்திலே ஆரவாரமில்லாமல் எழுந்து வருகிறது ஒரு அழகிய ஆலயம். ஆம்! சாயி நாதனின் அருள் கிருபை ததும்பும், தேடி வரும் பக்தர்களுக்கு ஓடி வந்து உதவிக்கரம் நீட்டும் அவர் அன்புக்கு ஓர் இல்லம்.

சீரடிசாயி பாபாவின் நாமத்தில், இலங்கை திருநாட்டிலேயே மிகப் பிரம்மாண்டமான ஆலயம், ஆசிரமம், சமூக சேவை மையமாக அவிசாவளை புவக்பிட்டிய நகரத்தில், எல்ஸ்டன் தோட்டத்தில் தலை நிமிர்ந்து வருகிறது இந்த ஆலயம்.

பத்து ஆண்டுகளுக்கு முன், சில பெரியோர்களின் கனவுகளில், ஒரே சமயம் எழுந்த சீரடி சாயிபாபாவின் கட்டளையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட கைங்கர்யமே இந்த அவிசாவளை சீரடி பாபா ஆலயம். மறைந்த தேசபந்து திரு ஈஸ்வரனின் தலைமையில், ஆலயத்தை அமைப்பதற்கான செயற்பாடுகள் 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, ஆலயத்தை அமைப்பதற்குத் தகுதியான இடத்தை கண்டுபிடிக்க பெருமுயற்சி எடுக்கப்பட்டது. மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் பேருதவியாலும், முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் ஒத்துழைப்பினாலும், மற்றும் பலருடைய தொண்டினாலும், இந்த மலையடிவார பிரதேசம் பாபாவினால் தனது இலங்கைக்கான முக்கியமான தலமாகத் தெரிவு செய்யப்பட்டு ஆலய நிர்மானவரை படங்கள் தயார் செய்யப்பட்டது.

பல சவால்கள் சோதனைகளுக்கு மத்தியில் புவக்பிட்டிய எல்ஸ்டன் தோட்ட இடம் முடிவாகி கட்டிட அனுமதிகள் பெறப்பட்ட நிலையில், திருப்பணிகள் செய்வதில் ஒரு முன்னுதாரணமாக விளங்கிய தேசபந்து தெயவநாயகம் ஈஸ்வரன் இவ்வுலகை நீத்தார்.

அவர் ஆரம்பித்த இந்தப் பணியை அவரமைத்த, சீரடி சாயி பாபா அறக்கட்டளையினர் 7 வருடங்களுக்கு முன்பாக அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தனர்.

இப் பெரும்பணியைத் தலைமை தாங்கி, தலைமேற்கொண்டு ஈஸ்வரனின் சகோதரர் தெய்வநாயகம் வீரபாகு நிறைவேற்றி வருகிறார்கள். ரம்பொடை ஆஞ்சநேயர் ஆலயம், ரம்பொடகலை (குருநாகல்) 67.5 அடி சமாதி புத்தர் கற்சிலை போன்ற பாரிய ஆன்மீக வரலாற்றுச் சின்னங்களை ஈஸ்வரன் நிறுவினார்களோ, அதே சிறப்புடனும் அவிசாவளையில் இந்த சீரடி பாபாவின் பெயரிலான ஆலயம், ஆசிரமம், தியான, சமூக சேவை மையமாக மிக நேர்த்தியான முறையில் அமைந்துள்ளது.

தென்னிந்தியச் சிற்பக் கலைஞர் ஜெயகுமாரின் தலைமையில், ஆறு சிற்பிகள் தங்களின் இரண்டு வருட உழைப்பினை இத்திருப் பணிக்காக தந்துள்ளார்கள். புகழ் பூத்த கட்டிடக் கலைஞரான ராஜு சிவராமன் தலைமையில் நம் நாட்டுக் கட்டிடக் கலைஞர்களின் திறனிலும் உலகெங்குமுள்ள ஆன்மீக அன்பர்களின் அனுசரணையிலும் இந்த பிரம்மாண்டமான ஆலயம் உருவாகியுள்ளது.

நிகழும் 2025ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 8ஆம் திகதி காலை 5 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி, மார்ச் 9ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணி முதல் 11.50 மணி வரையான சுப நேரத்தில் பிராண பிரதிஷ்டை மற்றும் ஆலய திறப்பு விழா நடைபெற்றது. சிறப்பு ஹோமாதிகள் மற்றும் பூஜைக் கிரியைகள், பிரம்ம ஸ்ரீ இலக்ஷ்மி காந்த ஜெகதீசக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றன.

பிராண பிரதிஷ்டை செய்வதற்காக வட இந்தியாவிலிருந்து உலக சாயி அறக்கட்டளையின் ஸ்தாபகரும் சீரடிசாயியின் புகழை உலகெங்கும் கொண்டு செல்லும் குரு, டாக்டர். சந்திரபானுசத்பதி கலந்து கொண்டுள்ளனர். அத்துடன், சிறப்புப் பஜனை செய்வதற்காக சத்ய சாயி பாபாவின் நேரடி ஆசி பெற்ற உலகப் புகழ் சாயிபஜன் பாடகர் ரவிராஜ்நாசேரி மும்பையிலிருந்து வந்துள்ளார். ஆன்மீக ஆர்வலர்கள், சாயி பக்த கோடிகள் அனைவரும் இந்த ஆலய நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

கட்டுமானப் பணியிலும், பிராண பிரதிஷ்டை திறப்பு விழா நிகழ்வுகளிலும் உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம்.

மேலதிக விபரங்களுக்கு
கமல்ராஜ்
077 313 9954,
வள்ளி
076 163 0462
www.shiridisailanka.org




# “கோமாளியொன்று பாராளுமன்றம் வந்துள்ளது”



இவ்வுலகில் தமிழர்களுக்கென தனி மதிப்பு உள்ளது. அந்த மதிப்பை சீர்குலைப்பதற்கு அவ்வப்போது துரோகிகளும், கோமாளிகளும் வந்துசெல்வதும் வழமை. அப்படிதான் இம்முறையும் கோமாளியொன்று பாராளுமன்றம் வந்துள்ளது என தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேசவாதம்பேசி தமிழர்களைப் பிரித்தாள்வதற்காகக் கைக்கூலியாக வந்துள்ள இந்த நபர், கத்தரி தோட்ட வெருளிகள் பற்றிக் கதைப்பது வெட்கக்கேடாகும்.

இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் உள்ளன. எவரும் இரண்டாந்தர பிரஜைகள் அல்லர் என்ற நிலைப்பாட்டிலேயே தேசிய மக்கள் சக்தி உள்ளது.

நாட்டில் வாழும் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கக்கூடிய கட்சிதான் தேசிய மக்கள் சக்தி. மாற்றம் வேண்டும் என்பதற்காகவே யாழ். மக்களும் எமக்கு அமோக ஆதரவை வழங்கினர்.

இந்த மக்கள் ஆணையைப் புரிந்துகொள்ளப் பக்குவமில்லாத அரசியல் கோமாளி, தற்போது விமர்சன அரசியலை முன்னெடுத்து வருகின்றது. சமூகவலைத்தளங்களில் பிரபல்யமடைவதற்காக வீர வசனங்களைப் பேசி, தன்னையும், தன்னை சூழவுள்ள ஒரு சிலரைப் பற்றி மட்டுமே பேசும் கோமாளிகளெல்லாம் தலைவர்களாக முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது மலையக உறவுகள் தமிழர்களின் சுயநிர்ணய கோரிக்கைக்கு எதிராக நின்றதில்லை. உரிமைப் போராட்டங்களைக்கூட ஆதரித்துள்ளனர்.

எனவே, இணைந்துவாழும் எங்களைப் பிரதேச வாதத்தைக் கிளப்பிவிட்டுப் பிரித்தாள முடியாது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

தென்னிலங்கையில் மஹிந்தவும், அவரின் சகாக்களும் செய்த அரசியல் பாணியை, வடக்கில் செய்வதற்கு இந்த கோமாளி முற்படுகின்றது என்றார்.



## பிரபல பாடசாலைக்கு அருகில் ஐஸூடன் ஒருவர் கைது

பாறுக் ஷிஹான்

பிரபல பாடசாலைக்கு அருகில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் கைதான சந்தேக நபர் தொடர்பில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை யினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை(07) இரவு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலைக்கு அருகில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் சம்மாந்துறை பகுதி புளக், ஜே கிழக்கு 03 பிரிவு பகுதியை சேர்ந்த 34 வயதுடையவர்என்பதுடன் அவரிடமிருந்து 1 கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்தது.

அத்துடன் சந்தேக நபர் உட்பட சான்றுப் பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்த ப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.





## வாகன விபத்தில் இருவருக்கு காயம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டு - கல்முனை பிரதான வீதியில் குருக்கள்மடம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (9) அன்று இடம்பெற்ற வாகன விபத்தில் சஅருவர் காயமடைந்துள்ளனர்.

பிரதான வீதியூடாக ஒட்டமாவடியில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியும் கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த காரும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (9) அன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் சிக்கிய முச்சக்கர வண்டி தீப்பிடித்து எரிந்துள்ளதுடன் அருகிலிருந்தவர்கள் தீயைப் பரவவிடாமல் தடுத்துள்ளனர்.

விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த ஒட்டமாவடியைச் சேர்ந்த பெண்ணொருவர் உட்பட இருவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

மேலும் விபத்து தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


## நீராடிக் கொண்டிருந்த மாணவன் மாயம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி கடலில் சனிக்கிழமை (08) மாலை நீராடிக் கொண்டிருந்த மாணவன் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

காத்தான்குடி நதியா கடற்கரையில் 5 மாணவர்கள் நீராடிக் கொண்டிருந்த நிலையில், ஒரு மாணவன் கடலில் மூழ்கியுள்ளதுடன் ஏனைய நான்கு மாணவர்களும் தப்பியுள்ளனர்.

காத்தான்குடி ஏ.எல்.எஸ்.மாவத்தை முதலாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த



16 வயதுடைய முகம்மது ரமீஸ் முகம்மது சனாகி எனும் மாணவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார். காத்தான்குடி நூறானியா வித்தியாலயத்தில் தரம் 11ல் இந்த மாணவர் கல்வி கற்று வரும் நிலையில் சக மாணவர்களுடன் கடலில் குளித்துக் கொண்டிருந்த போது கடலில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் கொந்தளிப்பாகக் காணப்படுகின்ற நிலையில், குறித்த மாணவனைத் தேடும் பணி மிகவும் சிரமமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## துபாயில் இருந்து வந்த பெண் சிகரெட்டுகளுடன் கைது

துபாயில் வீடொன்றில் வீட்டுப் பணியாளராகப் பணிபுரிந்த பலந்தோட்டை - ரம்புக்கனை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணொருவர் வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (09) அன்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் பயணப் பையில் மறைத்து



வைக்கப்பட்டிருந்த சுமார் 216,000 ரூபாய் மதிப்புடைய 14,400 “மன்செஸ்டர்” சிகரெட்டுகள் அடங்கிய 72 சிகரெட் கார்டூன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், குறித்த பெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு, எதிர்வரும் 13ஆம் திகதி நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## காலாவதியான பேரீச்சம்பழம் சிக்கியது

புறக்கோட்டையில் ஒரு கடையிலிருந்து விற்பனைக்குத் தயாராக இருந்தபோது காலாவதியான பேரீச்சம் பழங்கள் ஒரு தொகை கைப்பற்றப்பட்டன.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் கம்பஹா மாவட்ட சோதனைப் பிரிவினால் சனிக்கிழமை (08) நடத்தப்பட்ட சோதனையின்



போது உற்பத்தி ஆண்டு மாற்றப்பட்டு விற்பனைக்குத் தயார் நிலையில் இருந்த சுமார் 220 கிலோ கிராம் எடையுள்ள பேரீச்சம்பழம் கைப்பற்றப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அடுத்த வாரம் மாளிகாகந்த நீதிமன்றத்தில் அந்த வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

## ஒரு இலட்சத்துக்கு ஏலம் போன மாம்பழம்

பி.கேதீஸ்

தலவாக்கலை அருள்மிகு ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் வருடாந்த தைப்பூச திருவிழாவின் 7 ஆம் நாள் மாம்பழத் திருவிழா சனிக்கிழமை (8) மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பூஜையின் பின்னர் முருகப் பெருமானுக்குப் படைக்கப்பட்ட மாம்பழம் ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

குறித்த மாம்பழம் ரூபாய் ஒரு இலட்சம் வரை பக்தர்களால் ஏலம் கேட்கப்பட்டது. இதன்போது ஏலம் விடப்பட்ட மாம்பழத்தை தலவாக்கலை நகரில் இயங்கும் ஜப்னா ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஜெகமோகன் ஒரு இலட்சம் ரூபாய் பணத்தைச் செலுத்தி மாம்பழத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.





# அறிவைச் சேகரித்து, வாழ்வை வெற்றிகரமாக மாற்ற வேண்டும்

பிரபஞ்சமே ஒரு சில நொடிகளில் ஒரு கைகுலுக்கல் போல, இணைக்கும் அளவுக்கு தொடர்பு தொழில்நுட்பம் முன்னேறியுள்ளது. அதாவது, மனித சமுதாயத்தில் உடல் ரீதியான இடைவெளியை அப்படியே வைத்திருக்கும் அதே வேளையில், மன ரீதியான இடைவெளியைக் குறைக்கும் திறன் கொண்ட ஒரு தொழில்நுட்ப சகாப்தத்தை நாம் எதிர்கொள்கிறோம்.

உலகெங்கிலும் உள்ள சில நாடுகளில் செய்யப்பட்டுள்ளபடி, 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு சமூக ஊடகங்களைத் தடை செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து கொள்கை வகுப்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று இலங்கை சமூக நிபுணர் மருத்துவ சங்கம் சமீபத்தில் பரிந்துரைத்தது.

கடந்த ஆண்டு பதினெட்டு வயதுக்குட்பட்ட கிட்டத்தட்ட இருநூறு குழந்தைகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டதாகவும், சமூக ஊடகங்களின் பயன்பாடு இதற்கு ஒரு காரணமாக இருந்ததாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நவீன டிஜிட்டல் உலகில் சமூக ஊடகங்களை முற்றிலுமாக தடை செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், சமூக சுகாதார நிபுணர்கள் கூறுவது போல, அதை ஒரு வகையான உகந்த முன்மொழிவாக நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

நவீன ஜனநாயக ஆட்சி முறையில், சமூக ஊடகங்களுக்குத் தடை விதிக்காமல், கட்டுப்பாடு மற்றும் கொள்கை உருவாக்கம் இருக்க வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நவீன டிஜிட்டல் உலகில் கணினிகளைக் கையாளும் எவருக்கும், இணையமும் சமூக ஊடகங்களும் தணிக்கை நடைமுறைக்கு மாறான ஊடகங்கள் என்பதை அறிவார்கள். ஓர் ஊடகம் தடுக்கப்பட்டால், அதை அணுக ஏராளமான பிற வெளிப்புற ஊடகங்கள் உள்ளன என்பதை நவீன சமூகம் நன்கு அறிந்திருக்கிறது.

இலங்கையில் சமூக ஊடகங்கள் தடைசெய்யப்பட்ட பல சந்தர்ப்பங்களில், நாங்கள் அதை வேறு முறைகள் மூலம் அணுகினோம் என்பது சொல்லத் தேவையில்லை.

இதற்கிடையில், இணையம் அல்லது சமூக ஊடகங்கள் ஒரு மோசமான தொடர்பு கருவி என்று நாம் நினைக்கவில்லை என்றாலும், அது மோசமான மற்றும் நல்ல போக்குகளைக் கொண்டுள்ளது என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். எனவே, அவற்றின் பயன்பாட்டிற்கான குறிப்பிட்ட மற்றும் முறையான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வகுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

உலகமயமாக்கப்பட்ட சமூகத்தில், பாரம்பரிய சித்தாந்தங்கள் மற்றும் அணுகுமுறைகளுக்குள் சிக்கி, பழமைவாத அல்லது அடிப்படைவாதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட சில விஷயங்களின் மீதான கட்டுப்பாடுகளும் வேலிகளும் மிகவும் நடைமுறைக்கு ஏற்றதாக இருக்காது. ஏனெனில்; ஏனென்றால் உலகம் நமது பழமைவாத வரம்புகளைத் தாண்டி முன்னேறி விட்டது. எனவே, நமது அணுகுமுறைகள், செயல்பாடுகள் மற்றும் கொள்கை வகுத்தல் ஆகியவை நவீன உலகத்துடன் ஒத்துப்போக வேண்டும்.

“நவீன தகவல்தொடர்புகளை நம் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்ற வேண்டும், சில தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்முறைகள் மூலம் அறிவைச் சேகரித்து, நம் வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்ற வேண்டும்.”


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# சட்ட ஆட்சியில் அரசியல் தலையீடு

லக்ஸ்மன்

சட்டமா அதிபரின் தீர்மானங்களில் அரசியல் தலையீடு சட்டத்தின் ஆட்சிக்குப் பாதிப்பென்ற கருத்துடன், குற்றவியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்வது தொடர்பான சட்டமா அதிபரின் விருப்பம் மற்றும் நடைமுறைக்கு எதிராக அமைச்சரவையோ அல்லது அரசியல்வாதிகளோ தலையிடக் கூடாதென, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. அதே நேரத்தில், சட்டமா அதிபரின் அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் தேவையற்ற தலையீடுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் சங்கம் கோரியுள்ளதுடன், சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கு அத்தியாவசியமான சட்டமா அதிபர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களின் சுயாதீனத்தைப் பாதுகாக்க இது உதவும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கரமதுங்கவின் கொலை வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மூன்று இராணுவ - பொலிஸாரை விடுதலை செய்வதற்கான சட்டமா அதிபரின் தீர்மானம் மீளாய்வு செய்யப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் வெளியிட்ட கருத்தினை மேவியதாகவே இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், “குற்றவியல் விவகாரங்கள் தொடர்பாக சட்டமா அதிபரின் தீர்மானங்களை அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட அரசியல் அதிகாரிகள் மீளாய்வு செய்யக்கூடாது என்பது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வலுவான கருத்தாகும். இது போன்ற விமர்சனங்கள் சட்டத்தின் ஆட்சிக்கு முக்கியமான சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுதந்திரத்தை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது என வலியுறுத்தி” ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகெட மற்றும் செயலாளர் சட்டத்தரணி சதுர கல்ஹேன ஆகியோர் கையொப்பமிட்டு அக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புகளை விமர்சிப்பது தவறாகும். இருந்தாலும், சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் 10 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் வழக்கில் சட்டமா அதிபரால் சந்தேக நபர்களை விடுதலை செய்வது தொடர்பில் விடுக்கப்பட்ட அறிவித்தல் பலராலும் விமர்சிக்கப்பட்டு வருகிறது. சந்தேக நபர்களது விடுதலை தொடர்பிலான அறிக்கை வெளியானவுடன், படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க, சட்டமா அதிபருக்கு எதிராகப் பதவி நீக்கப் பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைக்குமாறு பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பில் 10 வருடங்களுக்கு மேலாக கல்கிசை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பி92%2009 இலக்க வழக்கில் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள மூவரையும் விடுதலை செய்யுமாறு கடந்த மாதம் 27ஆம் திகதி சட்டமா அதிபர் கடிதம் மூலம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்திருந்தார்.

10 வருடங்களாக இழுபறியிலிருந்த லசந்த வழக்கில் திடீரென இவ்வாறான முடிவு வெளிவந்தது என்பது சந்தேகமானதே. இருந்தாலும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் திறமையின்மையே வழக்குகள் தாமதமாவதற்குக் காரணம் என்ற ஜனாதிபதியின் அண்மைய கருத்துக்கள் கூட இந்த விரைவுக்குக் காரணமாக இருக்கலாம்.

இது தொடர்பான சட்டமா அதிபரின் அறிவித்தல் வெளியானதன் பின்னர் அமைச்சரவைப் பேச்சாளர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் சட்டமா அதிபரின் தீர்மானத்தை மீளாய்வு செய்வதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருகிறது என்றார்.

அதே நேரத்தில், பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய, லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை விவகாரத்தில் எமது அரசாங்கம் நீதியை நிலைநாட்டும் என்று எதிர்பார்த்துள்ள மக்களுக்கு தற்போது நடைபெற்றுவரும் செயற்பாடுகள் உணர்வுப்பூர்வமாக அமையும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். சட்டமா அதிபர் திணைக்களம் ஒரே போக்கில் செயற்படுவதை அவதானித்துள்ளோம். லசந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பில் புதிய விசாரணைகளை மேற்கொள்ளவும், சாட்சியம் திரட்டவும், தேவையாயின் புதிய குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்வது குறித்து ஆராயவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அத்துடன், நாடாளுமன்றத்தில் ஒருநாள் விவாதத்துக்கும் தான் தயார் என்று அறிவித்திருக்கிறார்.

சட்டத்தரணிகள் சங்கம், சட்டமா அதிபரின் தீர்மானங்கள் அல்லது உத்தரவுகளால் ஒரு தரப்பினருக்குப் பாதகமான நிலை ஏற்படுமாக இருந்தால், அதற்கெதிராக மேல் நீதிமன்றில் ரீட் மனுவைத் தாக்கல் செய்யலாம் அல்லது அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்யலாம். ஆனால், அரசியல் ரீதியாக மீளாய்வு செய்வதற்கு எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இல்லை என்று கூறினாலும், இருந்தாலும் அரசாங்கத்தின் இந்த மீளாய்வு அறிவிப்பு சட்டத்தில் அரசியல் தலையிடுதலையே குறிப்பதாக அமைந்திருக்கிறது என விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

சட்டமா அதிபர் வழங்கிய உத்தரவைக் கண்டித்துக் கடந்த வியாழக்கிழமை (பெப்ரவரி 6) கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சட்டமா அதிபர் அலுவலகத்திற்குச் சட்டத்தரணிகளுடன் சென்றவளை அவர்களை நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதுடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கோ பாதிக்கப்பட்டவர்களுக்கோ அல்லது குடிமக்களுக்கோ பதிலளிக்க வேண்டிய கடமை தமக்கு இல்லை என சட்டமா அதிபர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தவிரவும் தொடர்ச்சியாக பல்வேறு அமைப்புகளினால் கண்டன அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில்தான் சட்டமா அதிபர் திணைக்களம் சரியான தீர்மானத்தினையே அறிவித்திருக்கிறது என்ற வகையில் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியை நாடியிருக்கிறது. இதற்கு என்ன முடிவு கிடைக்கும் என்பது பின்னரே தெரியவரும்.

ஆர்ப்பாட்டங்களின் பின்னர் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, சட்டமா அதிபர் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பில் விசாரணைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக, சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தகவல் வெளிவந்திருக்கிறது. அவ்வறானால், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணையின் குறைபாடுகள் காரணமாக அமைந்திருக்கின்றன. இது குற்றப் புலனாய்வு விசாரணைத் தோல்வியாகவே பார்க்கப்படவேண்டும். அவ்வாறானால் இதில் சட்டமா அதிபர்; திணைக்களத்தின் தவறு இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இலங்கையில் இவ்வாறு குற்றவியல் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்ற நிலையில் விடுவிக்கப்படும் சந்தேக நபர்களில் இவர்கள் முதலானவர்கள் அல்ல என்பதும் இதற்கு முன்னரும் இவ்வாறு பல வழக்குகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதும் தெரிந்ததே. அதில் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை வழக்கும் அடங்கும். அதே நேரத்தில், சரியான விசாரணைகள் நடத்தப்படாது பலர் இன்னமும் சிறைகளில் வாடுகின்றனர். பலர் தண்டனைகளைப் பெற்றும் இருக்கலாம். சட்டத்திலுள்ள வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதும், குற்றத்தினை மேற்கொள்ளாதவர்கள் தண்டிக்கப்படுவதும் சாதாரண தவறுகளாகப் பார்க்கப்படக்கூடாது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் அறிவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய, கைவிடப்பட்ட வழக்குகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டிருந்தது. அதில் தராக்கி சிவராம், லசந்த விக்ரமதுங்க போன்றோரது வழக்குகளும் இருந்தன. அதே நேரம், கடந்த 2024 டிசெம்பர் மாத ஆரம்பத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார். அப்படியானால் லசந்தலின் வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்தமையினால்தான் இந்த அறிவிப்பு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுக்கப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது.

“அரச அதிகாரம் எடுக்கும் தீர்மானங்களின் மீதான விவாதம் ஜனநாயக சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாக இருப்பது போலவே, இந்த அதிகாரிகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதும் முக்கியம். சட்ட அதிகாரிகளால் சட்டத்திற்கு உட்பட்டு எடுக்கப்படும் தீர்மானங்கள் பொதுமக்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கருத்து சரியாக இருந்தாலும் கடந்த 10 வருடங்களாக நடைபெற்ற வழக்கில் இதுவரையிலும் குறைபாடுகளே இருந்திருக்கின்றன என்றால், இதுவரை உண்மை கண்டுபிடிக்கப்படாமைக்குக் காரணம் என்ன. அது இயலாமையா அல்லது முயலாமையா?

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தங்களது இயலுமைக்கும் வசதிக்கும் ஏற்றால்போல் விசாரணைகளை நடத்துவதும். சட்டத்தரணிகள் இருக்கின்ற ஆதாரங்களுக்கேற்ப வாதப்பிரதிவாதங்களை முன்வைப்பதும் முடிவுகளுக்கு வருவதும் நடைபெறுமாக இருந்தால் எதிர்காலத்திலும் பலர் முன்பு போலவே சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தித் தப்பித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம்.

எது எவ்வாறானாலும், குற்றப் புலனாய்வாளர்களும், சட்டமா அதிபர் திணைக்களமும் குற்றவியல் வழக்குகளில் தெளிவான பொறுப்புகளைக் கொண்டுள்ளனர் என்றவகையில், குற்றவாளிகள் தப்பிச் செல்ல அனுமதிக்காத பொறுப்பிலிருந்தும் தப்பித்துக்கொள்ளமுடியாது என்பது மாத்திரமே உறுதியானது.



## வாழ்வியல் தரிசனம்

கடவுள் மாயப்பொருள் அல்ல; உண்மைப் பொருள். பாவங்களைச் செய்யும் பாவிகள், கடவுள் அதைக் கண்டுகொள்ள மாட்டார் என்று எண்ணிவிடுகின்றனர். இத்தகையவர்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதேயில்லை.

இவர்களுக்கு கடவுள் ஊடாக இயற்கையும் தண்டனை வழங்கும். எந்தவொரு மனிதனும் இயற்கையின் விதிகளை மீறமுடியாது.

எதையும் சிந்திக்காது உணர்வுகளுக்கு அடிமைப்பட்டால், செய்யும் தவறுகளை உணரமுடியாது. இளமையில் இருந்தே யாவரும், தங்களைத் தாங்களே நல்வழியில் புதுப்பித்த வண்ணம் இருக்க வேண்டும்.

வயதில் மூத்தவர்களும்கூட, தங்களின் நிலை உணராது திணறுகின்றர். பெற்றோரின் பொறுப்பானது, பிள்ளைகளை ஒழுக்கத்தின் ஊடாகப் பிரகாசிக்கச் செய்யவேண்டும்.

உலகில் கோடானுகோடி மக்கள் இருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறானவர்கள்தான். எனவே, தனிநபர்களுக்கு தங்களை உருவாக்கும் பொறுப்பு இருக்கிறது. நல்லோர்கள் இணைந்தால் புவனம் தானாகவே மிளிரும். நற்கருமம் அழிவதில்லை.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்



### அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் , மஜீத் நகர் முதலான பகுதிகளில் காட்டு-யானைகள் கிராமத்துக்குள் புகுந்து, தென்னை மரங்கள், வாழை, முதலான பயிர்களையும் துவம்சம் செய்துள்ளதோடு, ஒரு ஏக்கருக்கு மேற்பட்ட வேளாண்மைகளையும் துவம்சம் செய்துள்ளதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

மனிதன் - யானை மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும், அவற்றையும் மீறி சில அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இல்லை. அந்த வகையில், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் பகுதிக்குள் சனிக்கிழமை (08) இரவு நுழைந்த காட்டு யானைகள் தென்னை, கத்தரி முதலான பயிர்களையும் வேளாண்மைகளையும் நாசமாக்கியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வீடொன்றையும் துவம்சம் செய்துள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றதுடன் யானையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- ஏ.எச்.ஹஸ்பர்



# உலக பருப்பு தினத்தின் வரலாறும் முக்கியத்துவம்

உலகம் முழுவதிலும் உள்ள மக்களின் உணவில் பருப்பின் முக்கியத்தை உணர்த்தி மக்களை விழிப்புணரச் செய்யும் நோக்கில் ஆண்டுதோறும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி உலக பருப்பு தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இத்தினத்தை கடந்த 2009ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை முதன்முதலில் கொண்டாடியது.

பருப்பு மற்றும் பயறு வகைகளின் முக்கியத்துவத்தை ஐ.நா. அமைப்பு கடந்த 2013ஆம் ஆண்டில் புரிந்து கொண்டதைத் தொடர்ந்து, 2016ஆம் ஆண்டு முழுவதும் பருப்புகளின் ஆண்டாக கொண்டாடப்பட்டது.

இதைத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டு முதல் பருப்புகளின் தேவை மற்றும் அதன் பயன்பாடு குறித்து உலக அளவில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. எதிரவரும் 2050ஆம் ஆண்டுக்குள்ளாக உலகின் பருப்பு உற்பத்தியை இரட்டிப்பாக இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

உலக பருப்பு தினத்தின் வரலாறு மற்றும் முக்கியத்துவம்

பருப்பு என்பது இந்தியாவில் பயன்படுத்தப்படும் உலர்ந்த பட்டாணி, பீன்ஸ் மற்றும் பருப்பு வகைகளைக் குறிக்கிறது. இந்த பருப்புகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பல்வேறு நீர்ம உணவுகளும் தால் என அழைக்கப்படுகிறது. இந்த பருப்புகள் தெற்காசிய நாடுகளில் மிக முக்கியமான உணவுப்பொருட்களில் ஒன்றாக உள்ளன, மற்றும் இந்திய துணைக் கண்டத்தின் முக்கிய உணவு வகைகளில் ஒன்றாகும்

இது வித்தியாசமான மற்றும் கூடுதலான சுவையை உணவிற்கு கொடுக்கின்றன. இது உணவிற்கு சுவையைக் கொடுப்பது மட்டுமின்றி, இவற்றில் அதிகளவு புரதம், நார்ச்சத்து, வைட்டமின்கள் மற்றும் தாதுக்களும் நிரம்பி இருக்கிறது. இந்த பதிவில் நாம் தினமும் உபயோகிக்கும் சில பருப்புகளையும், அதில் இருக்கும் புரத்தின் அளவையும் தெரிந்து கொள்ளலாம்.

உடல் நலனை காப்பதிலும் உடல் எடையை குறைப்பதிலும் பருப்பு வகைகளின் பங்கு மிக பெரியது. இது மட்டுமல்லாமல், பருப்பு பயிர்ச்செய்கை பணிகளுக்கு உகந்தது. பருப்பு வகைகள் மூலமாக மக்களின் உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதோடு, பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதாக இந்த பயிர் வகைகள் அமைந்துள்ளன.

## பருப்பு தினத்தின் நோக்கம்

இளைஞர்கள் மத்தியில் நிலையான விவசாய தொழிலை வளர்த்தெடுக்க பருப்பு வகை பயிர்கள் மிக உதவிகரமாக இருக்கும் என்று ஐ.நா. அமைப்பு நம்புகிறது. பருப்பு பயிர்ச்செய்கை மற்றும் அதன் மதிப்பு கூட்டுப் பொருள் உற்பத்தி மூலமாக ஏராளமான கிராமப்புற பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

## பருப்பு உற்பத்தி

பருப்பு மற்றும் பயறு வகைகளின் முக்கியத்துவத்தை அதிகம் உணர்ந்தவர்கள் ஆசிய நாட்டவர்கள் என கூறலாம்.

அத்துடன், உலகளவில் அதிக பருப்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் 25 சதவீதத்துடன் இந்தியா முதல் இடத்தில உள்ளது. அதேநேரம், அரிசி, கோதுமை போன்ற பயிர்களை காட்டிலும் பருப்பு வகைகளை உற்பத்தி செய்யத் தேவைப்படும் உரம் மற்றும் மனித உழைப்பு முதலீடுகள் குறைவாக தேவைப்படும் என்ற சூழலிலும் அதற்கேற்ப செயல் திட்டங்கள் இல்லாத காரணத்தாலும் தக்க அரசு உதவியின்மையாலும் உலக அளவில் இறக்குமதியிலும் 27 சதவீதத்துடன் இந்தியா முதல் இடத்தில் உள்ளது.

இந்தியாவின் தென் மாநிலங்களில் தினசரி சாம்பார் மற்றும் காய்கறி கூட்டு ஆகியவற்றுடன் சேர்த்து பருப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது தவிர, இட்லி, தோசை ஆகியவற்றின் மூலமாக உளுந்தம் பருப்பு அதிகம் உட்கொள்ளப்படுகிறது. பலர், பருப்பு வகைகளை பொடியாக நுணுக்கி, அவற்றை நெய் சேர்த்து, சாதத்துடன் சாப்பிடுகின்றனர். அன்றாட உடல் இயக்கத்திற்கு தேவையான ஆற்றல் பருப்பு வகைகள் மூலமாக கிடைக்கிறது.

## பருப்பின் வகைகள்

**உளுந்து பருப்பு:** கருப்பு உளுந்து என்று அழைக்கப்படும் உளுத்தம் பருப்பு, இந்த உணவில் முக்கிய இடத்தை பெறுகிறது. பெரும்பாலும், இந்திய உணவுகளான தால் மக்கானி மற்றும் இட்லி போன்ற பிரபலமான உணவு தயாரிப்பில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. 100 கிராம் வேகவைத்த பருப்பில் தோராயமாக 25 கிராம் புரதம் உள்ளது. உளுந்து பருப்பில் நார்ச்சத்து, இரும்பு மற்றும் மெக்னீசியம் அதிகமாக உள்ளதால், இது உணவில் கூடுதல் சத்தை கொடுக்கிறது.

**கடலை பருப்பு:** உடைத்த கொண்டைக்கடலையில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இது சிறிதளவு நட்ஸ் சுவையுடன் உறுதியான அமைப்பை கொண்டுள்ளது. 100 கிராம் வேகவைத்த பருப்பில் தோராயமாக 22 கிராம் புரதம் உள்ளது. கடலை பருப்பில் நார்ச்சத்து, இரும்புச்சத்து மற்றும் பி வைட்டமின்கள் நிறைந்திருக்கின்றன. இது சைவ உணவு சாப்பிடுபவர்களுக்கு சிறந்த சத்தான சைவ தேர்வாக அமைகிறது.

**துவரம் பருப்பு:** பட்டாணி என்று அழைக்கப்படும் துவரம் பருப்பு, இந்திய சமையலில் பிரதானமான ஒன்றாக திகழ்கிறது. இது சற்று இனிப்பு சுவையுடன் பல சத்துக்களை கொண்டுள்ளது. 100 கிராம் சமைத்த பருப்பில் தோராயமாக 22 கிராம் புரதம் உள்ளது. துவரம் பருப்பு கார்போஹைட்ரேட்டுகள், நார்ச்சத்து மற்றும் மெக்னீசியம் மற்றும் பொட்டாசியம் போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களின் நல்ல ஆதாரமாக இருக்கிறது.

**பாசி பருப்பு:** பாசி பருப்பு மிகவும் விரும்பப்படும் பருப்பு வகைகளில் ஒன்று. இதில் 100 கிராமமில் சுமார் 24 கிராம் புரதம் இருக்கிறது. பாசிப்பருப்பு சேர்த்த உணவு நார்ச்சத்து, இரும்பு மற்றும் ஃபோலேட் ஆகிய சிறந்த சத்துக்களால் நிறைந்திருக்கிறது, இது எடை குறைக்க விரும்புபவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரவல்லது.

**மசூர் பருப்பு:** மசூர் பருப்பு அல்லது சிவப்பு பருப்பு விரைவான சமையல் நேரம் மற்றும் மண்ணின் சுவையால் நினைவு கூறப்படும் மற்றொரு பிரபலமான பருப்பு வகை. 100 கிராம் வேகவைத்த பருப்பில் தோராயமாக 26 கிராம் புரதம் உள்ளது. மசூர் பருப்பில் நார்ச்சத்து, பொட்டாசியம் மற்றும் இரும்புச்சத்து போன்றவை அதிக அளவில் உள்ளன. இது எந்த உணவிலும் ஒரு சத்தான துணை உணவாகும்.



# 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டத்துக்கு ஆதரவாக ஜப்பான் உதவி

ஜப்பான் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் JPY 300 மில்லியன் மானிய உதவியை வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் அண்மையில் கைச்சாத்திட்டது, இது 'கிளீன் ஸ்ரீ லங்கா' (Clean Sri Lanka) திட்டத்திற்கான ஜப்பானின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்த மானிய உதவிக்கான கையெழுத்திடும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் தொழில் துறை அமைச்சர் மற்றும் பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ மற்றும் ஜப்பானின் வெளியுறவுக்கான நாடாளுமன்ற துணை அமைச்சர் திருமதி அகிகோ இகுயினா ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் குறிப்புகளில் இலங்கைக்கான ஜப்பானிய தூதர் அதிமேதகு அகியோ இசோமாட்டா மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தன ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்த மானிய உதவியின் கீழ், ஜப்பானிய நிறுவனங்களால் தயாரிக்கப்படும் 28 உயர்தர குப்பை அகற்றும் இயந்திரங்கள், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய திடக்கழிவு மேலாண்மை ஆதரவு மையம் (NSWMSC) மூலம் மேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படும். இந்த இடங்களில் கழிவு சேகரிப்பு மற்றும் போக்குவரத்து திறனை மேம்படுத்துவதையும், சுகாதாரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான கழிவு மேலாண்மையை உறுதி செய்வதையும் இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கழிவுகள் குவிவதையும், பொது சுகாதாரம் மற்றும் காற்றின் தரத்தில் அதன் தாக்கத்தையும் சமாளிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த ஜப்பான், மேல் மாகாண திடக்கழிவு மேலாண்மை பெருந்திட்ட உருவாக்கம் உட்பட கழிவுகளை அகற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. இலங்கையின் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஜப்பானின் நீண்டகால அர்ப்பணிப்பை இந்த சமீபத்திய உதவி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# பெருநிறுவன மகிழ்ச்சிகர சுட்டெண்ணில் கொமர்ஷல் வங்கிக்கு முதலிடம்

LMD சஞ்சிகையால் வெளியிடப்பட்ட முதலாவது பெருநிறுவன மகிழ்ச்சி சுட்டெண் (CHI) இல் இலங்கையின் வங்கிகளில் கொமர்ஷல் வங்கி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதனைத் தவிர மேலும் இந்த முன்னோடி முயற்சிக்காக PepperCube ஆலோசகர்களால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் எதிர்பார்க்கப்பட்ட 16 பண்புக்கூறுகளில் வங்கி பதிவு செய்துள்ள உயர் நிலைகளைத் தொடர்ந்து, இலங்கையின் 'மகிழ்ச்சிகரமான இரண்டாவது வீடுகளில்' ஒன்றாகவும் தரவரிசையில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதே வேளை கொமர்ஷல் வங்கியானது 16 பண்புக்கூறுகளில் 14 இல் மிக உயர்ந்த தரவரிசைப் பெற்ற வங்கியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஊழியர்கள் தொடர்பான அடிப்படையான மற்றும் முக்கியமான பல அம்சங்களில் வங்கித் துறையானது திருப்திகரமான நிலையை பதிவு செய்திருந்தது. இதற்கிணங்க 'ஊதிய அளவுகள்', 'வெகுமதிகள் மற்றும் சலுகைகள்', 'தொழில் முன்னேற்றம்' , 'பணிச் சூழல்', 'பாலின சமநிலை', 'சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு', 'தொழில் வாழ்க்கை சமநிலை', 'பணியிட பன்முகத்தன்மை' மற்றும் 'பணியிட நெகிழ்வுத்தன்மை போன்ற அம்சங்களில் உயர் நிலையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

அது மட்டுமன்றி கொமர்ஷல் வங்கியானது 'நிதியியல் ஸ்திரத்தன்மை', 'பெருநிறுவன தலைமைத்துவம்', 'பணியிட தோழமை', 'திறந்த கலாசாரம்' மற்றும் 'பொழுதுபோக்கு வசதிகள்' ஆகியவற்றிற்காக, வங்கித் துறையில் முதலிடத்தைப் பெற்றது.



வங்கித் துறையில் அதன் உறுதியான தலைமைத்துவத்திற்கு மேலதிகமாக, LMD நிறுவன மகிழ்ச்சி சுட்டெண் அனைத்து துறைகளிலும் இலங்கையின் முதல் ஐந்து பெரு நிறுவனங்களில் கொமர்ஷல் வங்கியை தரவரிசைப்படுத்தியுள்ளது, இதற்கிணங்க 16 பண்பு தரவரிசைகளில் 10 இல், மற்றும் ஒட்டுமொத்த முதல் பத்து இடங்களில், பண்புக்கூறுகளில் 15 இல் என தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

'நிதியியல் ஸ்திரத்தன்மை' மற்றும் 'பணியிட நட்புறவு' ஆகிய பண்புகளுக்காக வங்கி ஒட்டுமொத்தமாக இரண்டாவது இடத்தையும், 'தொழில் முன்னேற்றத்திற்காக' மூன்றாவது இடத்தையும், 'பணியிட பன்முகத்தன்மை' மற்றும் 'பணியிட நெகிழ்வுத்தன்மைக்காக' இலங்கையில் நான்காவது இடத்தையும் பிடித்தது. 'இன்றைய வேகமான பெருநிறுவன சூழலில் பணியிட மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது, மேலும் பணியிட நல்வாழ்வு பற்றிய புரிதலை மறுவரையறை செய்வதற்கும் இந்த துறையில் நிறுவனங்களின் முன்னேற்றத்தை தரவரிசைப்படுத்துவதற்கும் LMD இதழின் இந்த அற்புதமான முயற்சியை நாங்கள் வரவேற்கிறோம்' என்று கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குனரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க தெரிவித்தார். கொமர்ஷல் வங்கியில், ஊழியர்கள் தமது வாழ்க்கையை கட்டியெழுப்பும்போது அவர்களின் முழு திறனை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்தும் பணியிட கலாசாரத்தை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. எங்களின் மிகப் பெரிய பலம் நமது மக்களே, மேலும் வேலை தொடர்பான மன அழுத்தத்தைக் குறைப்பது உட்பட, அவர்களின் நல்வாழ்வில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது, ஏனெனில் இவ்வாறான மன அழுத்தமானது ஊழியர்களின் ஆரோக்கியத்தையும் நிறுவனத்தின் உற்பத்தித்திறனையும் எதிர்மறையாக பாதிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



சீனா

### சீனாவில் மண்சரிவு:

# 30 பேர் மாயம்

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 30க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

சீனாவின் தென்மேற்கில் உள்ள சிச்சுவான் மாகாணத்தில், சனிக்கிழமை (8), திடீரென ஏற்பட்ட மண்சரிவினால் 10க்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணுக்குள் புதைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து, அந்நாட்டின் அவசரக்கால மேலாண்மை அமைச்சகத்தின் சார்பில் நூற்றுக்கணக்கான மீட்புப் படை வீரர்கள் அப்பகுதியில் குவிக்கப்பட்டு மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில், மண்ணுக்குள் புதைந்த 2 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், மண்சரிவினால் மாயமாகியுள்ள 30க்கும் மேற்பட்டோரைத் தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுகுறித்து, தனது அனுதாபத்தை தெரிவித்துள்ள சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், அந்நாட்டு அதிகாரிகள் உடனடியாக மாயமானவர்கள் தேடி மீட்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், அந்நாட்டு பிரதமர் லி கியாங் அப்பகுதியை சுற்றியுள்ள இடங்களின் புவியியல் குறித்து உடனடியாக ஆய்வு மேற்கொள்ளுமாறும், ஆபத்தான இடங்களில் வசிக்கும் மக்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு மற்றொரு பேரிடர் ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் ஊடக அறிக்கைகளின்படி, கடந்த ஆறு மாதங்களாக மலையிலிருந்து பெரிய பாறைகள் அடிக்கடி உருண்டு வருவதை காண முடிந்தது என்று, கிராமவாசிகள் தெரிவித்ததாக கூறப்பட்டுள்ளது.

சிலி

### சிலியில் காட்டுத்தீ:

# 60 பேர் கைது



தென் அமெரிக்காவில் அமைந்துள்ள சிலி நாட்டில் நுபல், மவுலி ஆகிய மாகாணங்களில் கடந்த சில நாட்களாக காட்டுத்தீ வேகமாகப் பரவி வருகிறது.

காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புப்படையினர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். இரு மாகாணங்களிலும் 15 இடங்களில் காட்டுத்தீ பரவி வருகிறது.


இந்நிலையில், காட்டுத்தீ காரணமாக நுபல், மவுலி ஆகிய 2 மாகாணங்களிலும் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காட்டுத்தீயைப் பற்ற வைத்ததாக இதுவரை 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரீபியன் தீவு

### கரீபியன் தீவு கடலில்

# நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை



கரீபியன் தீவு கடலில், ஞாயிற்றுக்கிழமை(9) காலை, சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் 7.6 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

ஹோண்டுராஸ் வடக்கில் உள்ள கேமன் தீவுகளின் கடற்கரையில், இருந்து சுமார் 209 கிலோமீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கம் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கம் தொடர்பான விவரங்களை அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அந்த பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கம் காரணமாக, அமெரிக்க அட்லாண்டிக் அல்லது வளைகுடா கடற்கரைகளுக்கு சுனாமி எச்சரிக்கை எதுவும் இல்லை.

எனினும், போர்ட்டோ ரிக்கோ மற்றும் விர்ஜின் தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிக்கையில், கேமன் தீவுகள், ஜமைக்கா, கியூபா, மெக்சிகோ, ஹோண்டுராஸ், பகாமாஸ், பெலிஸ், ஹைட்டி, கோஸ்டா ரிகா, பனாமா, நிகரகுவா மற்றும் குவாத்தமாலா ஆகிய நாடுகளின் கடற்கரைகளில் மையப்பகுதியில் இருந்து 620 மைல்களுக்குள் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட “அபாயகரமான சுனாமி அலைகள்” ஏற்பட வாய்ப்புள்ளதாக, பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

புதுடெல்லி

### டெல்லி சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி:

# அடுத்த முதலமைச்சர் யார்?



டெல்லி சட்டசபைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று, 27 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பா.ஜனதா ஆட்சியைப் பிடித்துள்ளது.

இதையடுத்து, அடுத்த முதலமைச்சர் யார் என்பது குறித்து ஆலோசனை நடைபெறவுள்ளது.

பர்வேஷ் சர்மா, பன்சூரி ஸ்வராஜ், வீரேந்திர சச்தேவா ஆகியோர் முதலமைச்சர் பதவிக்கான போட்டியில் உள்ளதாகக் கூறப்படுகிறது. பா.ஜ.க. தேசிய செயலர் துஷ்யந்த் கவுதம், மனோஜ் திவாரி எம்.பி. உள்ளிட்டோர் பெயர்களும் பரிசீலனை உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

70 உறுப்பினர்களைக் கொண்ட டெல்லி சட்டசபைக்கான தேர்தல் கடந்த 5ஆம் திகதி நடந்து முடிந்தது. இந்த தேர்தலில், ஆம் ஆத்மி, காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. என 3 முக்கிய கட்சிகள் மும்முனை போட்டியை ஏற்படுத்தி இருந்தன. இந்த சூழலில் வாக்கு எண்ணிக்கை நேற்று (8) காலை 8 மணியளவில் தொடங்கியது. தொடக்கம் முதலே, பா.ஜ.க. பல்வேறு இடங்களில் முன்னிலை பெற்றது. ஆம் ஆத்மி கட்சி பின்னடைவைச் சந்தித்தது.

மற்றொரு முக்கிய கட்சியான காங்கிரஸ் தொடக்கத்தில் ஒரு தொகுதியில் முன்னிலை பெற்றிருந்தது. சற்று நேரத்தில் அதிலும் பின்னடைவைச் சந்தித்தது. இதன்படி காங்கிரஸ் கட்சி தொடர்ந்து 3ஆவது முறையாகப் படுதோல்வியைச் சந்தித்தது. மாநிலத்தில் ஓரிடத்தில் கூட அந்த கட்சி வெற்றி பெறவில்லை.

இதனைத்தொடர்ந்து பா.ஜனதா வேட்பாளர்களின் வெற்றி உறுதி செய்யப்பட்ட நிலையிலிருந்தது. வாக்கு எண்ணிக்கை முடிவில் அந்த கட்சி 48 இடங்களில் வெற்றி பெற்றது. இதன் மூலம் டெல்லி மாநில ஆட்சியை 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜனதா கைப்பற்றியது.

கடந்த 1993ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற பா.ஜனதா, டெல்லியில் முதன் முறையாக ஆட்சி அமைத்தது. முதலமைச்சராக மதன்லால் குரானா பதவி ஏற்றார். அவரைத் தொடர்ந்து சாகிப் சிங் வர்மா, சுஷ்மா சுவராஜ் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்தனர். 1998ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

அதன் பிறகு டெல்லி மாநில ஆட்சி என்பது பா.ஜனதாவின் கனவாக இருந்தது. தற்போது கிடைத்த அமோக வெற்றி மூலம், பா.ஜனதாவின் 27 ஆண்டுக் கால கனவு நனவாகியுள்ளது.

டெல்லியில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜனதா ஆட்சியைப் பிடித்துள்ளதால், வரலாற்று வெற்றியை அக்கட்சியினர் பெரிதாகக் கொண்டாடியுள்ளனர்.

### இலங்கைக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியா




இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்ற அவுஸ்திரேலியா, காலியில் வியாழக்கிழமை (06) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (09) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, நேதன் லையன் (3), ட்றெவிஸ் ஹெட், மிற்செல் ஸ்டார்க் (3), மத்தியூ கூனுமென்னிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 257 ஓட்டங்களையே பெற்றது. குசல் மென்டிஸ் ஆட்டமிழக்காமல் 85, தினேஷ் சந்திமால் 74, திமுத் கருணாரத்ன 36, ரமேஷ் மென்டிஸ் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, அலெக்ஸ் காரியின் 156, அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித்தின் 131, உஸ்மான் கவாஜாவின் 36, பியூ வெப்ஸ்டரின் 31 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 414 ஓட்டங்களைப் பெற்றது. பிரபாத் ஜெயசூரிய 5, நிஷான் பீரிஸ் 3, ரமேஷ் மென்டிஸ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இதையடுத்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, மத்தியூ குனுமென் (4), நேதன் லையன் (4), பியூ வெப்ஸ்டரிடம் (2) விக்கெட்டுகளை பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 231 ஓட்டங்களையே பெற்றது. அஞ்சலோ மத்தியூஸ் 76, குசல் மென்டிஸ் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 75 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, பிரபாத் ஜெயசூரியவிடன் ட்றெவிஸ் ஹெட்டை 20 ஓட்டங்களுடன் இழந்தபோதும், உஸ்மான் கவாஜாவின் ஆட்டமிழக்காத 27, மர்னுஸ் லபுஷைனின் ஆட்டமிழக்காத 26 ஓட்டங்களோடு ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக காரியும், தொடரின் நாயகனாக ஸ்மித்தும் தெரிவாகினர்.

### கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடர்:

# வெளியேற்றப்பட்டது செல்சி



இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடரிலிருந்து செல்சி வெளியேற்றப்பட்டது.


விலகல் முறையிலான இத்தொடரில், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியன் அணியின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான நான்காவது சுற்றுப் போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து செல்சி வெளியேறியது.

பிறைட்டன் சார்பாக ஜோர்ஜினியோ ருட்டர், கௌரு மிட்டோமா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, செல்சியின் கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் சனிக்கிழமை(08) நடைபெற்ற போர்ண்மெத்துடனான நான்காவது சுற்றுப் போட்டியில்; 0-2 என்ற கோல் கணக்கில் தோற்று எவெர்ற்றனும் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.

### ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# சமநிலையில் மட்ரிட்களின் மோதல்



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(09) அதிகாலை நடைபெற்ற அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் சமப்படுத்தியது.

றியல் மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிலியான் மப்பே பெற்றதோடு, அத்லெட்டிகோ மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜூலியன் அல்வரேஸ் பெற்றார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் உள்ளது. 49 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 45 புள்ளுகளுடன் மூன்றாமிடத்தில் பார்சிலோனாவும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றது. இதில் மற்றைய அணிகளை விட பார்சிலோனா ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



# சம்பியனான காரைதீவு விளையாட்டுக் கழகம்

காரைதீவு சகா

விபுலானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த தைப்பொங்கல் தின கடற்கரை கரபந்தாட்டத் தொடரில் காரைதீவு விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

காரைதீவு கடற்கரையில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வி.எஸ்.ஸி அணியை வென்றே காரைதீவு சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 10, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.